# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.08.07 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 14.50** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

ச.வ.-ஓ 24/2026

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பின் 107 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் அரசியலமைப்பு என குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையானது, அவ்வுறுப் புரையின் (5) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றி ருத்தப்படுகின்றது.

> “(5) உயர்நீதிமன்றத்தினது நீதிபதிகள் ஓய்வு பெறுவதற்கான வயது அறுபத்தேழாகவும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தினது நீதிபதிகள் ஓய்வு பெறுவதற்கான வயது அறுபத்தைந்தாகவும் இருத்தல் வேண்டும்:
>
> ஆயின் எவ்வாறாயினும், பிரதம நீதியரசரினது ஓய்வுபெறுவதற்கான தேதி, ஒன்றில் பிரதம நீதியரசர் அறுபத்தேழு வயதினை எய்துகின்ற அத்தேதியில் அல்லது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு ஆண்டு காலப்பகுதியொன்று பூர்த்திசெய்யப்படுகின்ற அத் தேதியில், இவற்றுள் எது முதல் நிகழ்கின்றதோ அத்தேதியாதல் வேண்டும்.”.

*அரசியலமைப் பின் 137 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**3.** அரசியலமைப்பின் 137 ஆம் உறுப்புரையில் “பத்தொன்பது பேர்களுக்கு அதிகமாகாத” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இருபத்திநான்கு பேர்களுக்கு அதிகமாகாத” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

PL 15891 - 470 (2026/08)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.